34009

OL/2024(2025)/48-T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**48 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

| | | |
|---|---|---|
| දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය | I, II | පැය තුනයි |
| தமிழ் இலக்கிய நயம் | I, II | மூன்று மணித்தியாலம் |
| Appreciation of Tamil Literary Texts | I, II | Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண்: ..........................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
நோக்குநரின் கையொப்பம்

## அறிவுறுத்தல்கள் :

* வினாத்தாள் I, வினாத்தாள் II ஆகியவற்றுக்கு விடையளித்து, முழுநேரமும் முடிவடைந்த பின்பு அவற்றை வேறுவேறாகக் கையளிக்கவும்.
* வினாத்தாள் I இற்குரிய விடையை இவ்வினாத்தாளிலேயே எழுதவேண்டும். இதற்காக வழங்கப்பட்டுள்ள இடத்தை மாத்திரம் பயன்படுத்தவும்.
* வினாத்தாள் II இற்கான விடையை எழுதுவதற்கு விடை எழுதும் புத்தகத்தைப் பயன்படுத்தவும்.
* வினாத்தாள் I இற்கு 40 புள்ளிகள்.
* வினாத்தாள் II இற்கு 60 புள்ளிகள்.

பரீட்சகர்களின் உபயோகத்திற்கு மாத்திரம்
வினாத்தாள் I

| வினா எண் | | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| மொத்தம் | இலக்கத்தில் | |
| | எழுத்தில் | |

| | |
|---|---|
| ..................... முதலாம் பரீட்சகர் | ..................... குறியீட்டு எண் |
| ..................... இரண்டாம் பரீட்சகர் | ..................... குறியீட்டு எண் |
| ..................... கணிதப் பரீட்சகர் | ..................... குறியீட்டு எண் |
| ..................... பிரதான பரீட்சகர் | ..................... குறியீட்டு எண் |

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் I

(எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.)

**1.** (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகத்தருகு ஏந்தினாள்;
'கெண்டை கெண்டை' யெனக்கரை ஏறினாள்;
கெண்டை காண்கிலள் நின்று தயங்கினாள்.

(அ) தலைவி பதற்றத்தோடு கரையேறியதன் காரணம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

(ஆ) அதன் மூலம் கவிஞர் உணர்த்த முற்படும் விடயம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(ii) "மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை அது போர்த்துக்
கருங்க யல்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி"

(அ) காவேரியின் ஓட்டம், இங்கு எவ்வாறு விவரிக்கப்படுகிறது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(ஆ) இதிற் பயின்றுள்ள உருவகங்களை இனங்கண்டு விளக்குக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(iii) "அவன் வளர்ந்து பெரியவனாகிறான்
மரக்குதிரையில் மீண்டும் சவாரி செய்கிறான்
ஒரு சடங்கின் மூலம்
தன் இளமையை அறிவிக்கிறான்
இரவு கழிந்ததும்
குதிரை உருமாறுகிறது"

(அ) இங்கு 'அவன்' என்னும் சுட்டு யாரைக் குறிக்கிறது? அவனது பொதுவான இயல்பு யாது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(ஆ) 'மரக்குதிரை' யாரைச் சுட்டுகின்றது? அக் குறியீடு மூலம் கவிஞர் உணர்த்த முற்படும் விடயம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iv) "காற்றை யாரோ கடத்திக்கொண்டு போன பிரமையில், மரங்கள் சோகம் சுமக்கின்றன. எதிர்பார்ப்பில் சிறகு முளைத்த மனித ஈக்கள், என்னை நோக்கி விரைகின்றன. கனவிலும் நினைவிலும் கடிதக்காரனை ஆராதிப்பதில் ஆசுவதம் காணும் புது யுகமிது."

(அ) காற்றுத் தொடர்பான விபரிப்பால் உணர்த்தப்படுவது யாது? அதை உணர்த்தும் பாங்கில் வெளிப்படும் நயத்தை விளக்குக.

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

(ஆ) 'மனித ஈக்கள்' என்ற உருவகம், மனிதருடைய எத்தகைய இயல்பினை உணர்த்துகின்றது? அந்த உருவகத்திற் காணப்படும் பொருத்தப்பாடு யாது?

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

(v) மாங்குடி மருதனார் என்ற புலவர் தம்முடைய அரசனுக்குண்டான போர் வெறியைத் தணிக்க 'மதுரைக் காஞ்சி' என்றதொரு நூலையே (அவ்வளவு பெரிய நூல் அது) இயற்றினார் என்றால், பழந்தமிழர் போர் வெறி என்ற பாலைவனத்தில் இஃது ஒரு நீர் ஊற்றுப் போன்று காணப்படுகின்றது.

(அ) பழந்தமிழர் போரில் காட்டிய தீவிர ஈடுபாடுமீது ஆசிரியர் கொண்ட வெறுப்பு எவ்வெவ்வாறு வெளிப்படுகின்றது?

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

(ஆ) மதுரைக்காஞ்சி என்ற நூல்மீது ஆசிரியர் கொண்ட மதிப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

(4 × 5 = 20 புள்ளிகள்) | 20 |

**2.** கீழ்க்காணும் உரைப்பகுதியை **அல்லது** செய்யுட் பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

எழுபதுகளின் இறுதியில் தமிழ்ச் சூழல் கொஞ்சம் முகத்துக்குச் சோப்பு போட்டு கழுவிக்கொண்டு கண்ணாடி பார்த்துத் தன்னைத் திருத்திக்கொண்டபோது பாலுமகேந்திரா புதிய சட்டகங்களின் மூலமாக அசையும் பிம்பங்களுக்குள் ஒரு கவித்துவத்தை நிகழ்த்தினார். முன்னதாக தேவராஜ், மோகன், பாரதிராஜா போன்றோருடைய படிநிலை மாற்றங்கள் தமிழரின் ரசனையை முழுவதுமாக மாற்றிக்கொண்டிருந்த உன்னதமான தருணம் அது. சினிமாப் பாணியில் சொன்னால் தமிழ்ச் சினிமாவுக்கு ஒரு சன்ரைஸ் ஷாட் நிகழ்ந்து கொண்டிருந்த நிமிடங்கள். அதுவரை வசனங்களையும், கதாபாத்திரங்களையும் மட்டுமே நம்பிய தமிழ்ச் சினிமா பின்புலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருந்த நேரம்.

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

இத்தனைக்கும் நிவாஸ் போன்றவர்கள் **பதினாறு வயதினிலே, கிழக்கே போகும்** ரயில் போன்ற பாரதிராஜாவின் படங்கள் மூலமாக செறிவான கட்டமைவை காமிரா கோணங்களில் நிகழ்த்திக்கொண்டிருந்தாலும், இயற்கையின் நுண்மையை சூரிய பிரமையில் பிரதிபலிக்கும் மனிதர்களைக் கடந்த இதர உயிர்களின் அழகை அதன் இயல்போடு மிகைப்படாமல் சட்டகத்தினுள் உயிர்ப்பூட்டிய கலைஞன் பாலுமகேந்திரா ஒருவரே. **அழியாத கோலங்களின் 'பூவண்ணம் போல நெஞ்சம்'** பாடலில் ஷோபா, பிரதாப் போத்தன் நடந்து வரும் காட்சிகளில் அவர்களைக் காட்டிலும் உற்சாகமாகக் காற்றுக்குத் தலையாட்டும் ஆற்றோரம் வளர்ந்த நாணல்களின் நெஞ்சை அள்ளும் அழகு தமிழ்ச் சினிமாவின் கவித்துவங்களுக்குத் துவக்கப் புள்ளி மட்டுமல்லாமல் படத்தில் இடம்பெற்ற ஓடை, வயல்வெளி, மணற்பரப்பு, பாலம், மரங்கள், நாணல், புதர்கள் ஆகியனவும் பாத்திரங்களாக மாறி தமிழின் நிலப்பரப்புக்கான சினிமாவாக அழியாத கோலங்கள் உயிர்பெற்றிருந்தது. ஒளிப்பதிவில் பேக்லைட் எனப்படும் உத்தியை இதுவரை இவரைப்போல இயற்கை ஒளியில் வெகுசிறப்பாகக் கையாண்டவர்கள் வேறு எவரும் இல்லை. இவருக்கு அடுத்தபடியாக அதில் கைதேர்ந்தவராக அசோக்குமார் தனிச்சிறப்புக் கொண்டவராக இருந்தாலும், முதன்முதலாகப் பொன்னிறக் கேசங்களை இயற்கையான பின் ஒளியில் நிகழ்த்திக் காட்டிய சினிமாக் கவித்துவம் அவருடையது. அவருக்குப் பிறகு வந்தவர்களில் இயற்கை ஒளியைச் செறிவாகத் திரைச் சட்டகத்தில் உள்வாங்கிக் கொண்டவர்களுள் அசோக்குமார், ராஜீவ் மேனன், மது அம்பாட் போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்த உயரங்களைக் கண்டிருப்பினும், அவர் காண்பித்த பச்சை நிறத்தை வேறு எவரும் காண்பிக்கவில்லை. இதற்காக வண்ணக்கலவை செய்யும் கிரேடிங்கில் அக்காலத்தில் எந்தக் கம்பியூட்டர் உபகரணங்களும் இல்லாமல் கைகளால் ஒவ்வொரு காட்சியாகச் சரிசெய்து வந்த காலங்களில் ஆங்கிலத்தில் லில்லி எனப்படும் புதிய உத்தியை இதற்காக அவர் பயன்படுத்தி வந்துள்ளார்.

(i) பாலுமகேந்திராவுக்கு முன்பும், பின்பும் தமிழ்ச்சினிமாவின் வளர்ச்சிக்குக் காரணமானவர்களாக, இங்கு குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(04 புள்ளிகள்)

(ii) இயற்கை ஒளியைக் கையாள்வதில் பாலுமகேந்திரா காட்டிய திறமை, இங்கு எவ்வெவ்வாறு விவரிக்கப்படுகிறது?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(04 புள்ளிகள்)

(iii) எழுபதுகளின் இறுதியில் தமிழ்ச் சினிமாவில் ஏற்பட்ட படிநிலை வளர்ச்சியை விவரிக்கும் பாங்கில் நீர் காணும் நயத்தைத் தெளிவுறுத்துக.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(06 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iv) தமிழ்ச் சினிமாவில் இயற்கைச் சூழலை உயிர்ப்போடு காட்சிப்படுத்துவதில் பாலுமகேந்திரா முன்னோடியாக விளங்கியமை நயம்பட விவரிக்கப்படும் பாங்கைத் தெளிவுறுத்துக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(06 புள்ளிகள்)

**அல்லது**

"அனை! எதிர்ந்து இவண் ஆய்வளையாரோடும்
மனையின் வாயில் வழியினை மாற்றினால்,
நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலான்;
வினையம் ஈது" என்று, அனுமன் விளம்பினான்.

"நீரெலாம் அயல் நீங்குமின்; நேர்ந்து, யான்
வீரன் உள்ளம் வினவுவல்" என்றலும்,
பேர நின்றனர் யாவரும்; பேர்கலாத்
தாரை சென்றனள் தாழ்குழலாரொடும்.

உரைசெய் வானரவீரர் உவந்து உறை
அரசர்வீதி கடந்து, அகன்கோயிலைப்
புரசையானை அன்னான் புகலோடும், அவ்
விரைசெய் வார்குழல் தாரை, விலக்கினாள்.

விலங்கி மெல்லியல், வெள் நகை, வெள்வளை,
இலங்கு நுண்ணிடை, ஏந்து இள மென் முலை,
குலம்கொள் தோகை மகளிர் குழாத்தினால்,
வலம்கொள் வீரன் வருவழி மாற்றினாள்.

வில்லும் வாளும் அணிதொறும் மின்னிட
மெல் அரிக்குரல் மேகலை ஆர்த்து எழ,
பல்வகைப் புருவக்கொடி பம்பிட
வல்லிஆயம் வலத்தினில் வந்ததே.

ஆர்க்கும் நூபுரங்கள் பேரி, அல்குலாம் தடந்தேர் சுற்ற,
வேற்கண் விற்புருவம் போர்ப்ப, மடந்தையர் மிடைந்த போது
பேர்க்க அரும் சீற்றம்பேர, முகம்பெயர்த்து ஒதுங்கிற்றல்லால்
பார்க்கவும் அஞ்சினான், அப்பருவரை அனைய தோளான்.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(i) இங்கு, இலக்குவனின் வீரம் வெளிப்படுமாற்றை விளக்குக.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(04 புள்ளிகள்)

(ii) தாரையின் ஆளுமைத் திறத்தை உணர்ந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை விவரிக்குக.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(04 புள்ளிகள்)

(iii) இலக்குவனின் ஒழுக்கத்தின்மீது அனுமன் கொண்ட நம்பிக்கையும், அந் நம்பிக்கை வீண்போகாதவாறும் வெளிப்படுமாற்றை விளக்குக.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(06 புள்ளிகள்)

(iv) வானர மகளிர் குழுவானது சேனையாக, பொருத்தமுற உருவகிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(06 புள்ளிகள்)

20

* *

[பக். 7 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**48 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය I, II
**தமிழ் இலக்கிய நயம் I, II**
Appreciation of Tamil Literary Texts I, II

## தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் II

※ பகுதி **II** இல் **1** **ஆம் வினாவுக்கும்,** ஏனைய **2, 3, 4, 5** ஆகிய வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்குமாக, மொத்தம் **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
※ தரப்படும் விடைப்புத்தகத்தில் விடை எழுதி, வேறாகக் கையளிக்கவும்.
※ பகுதி **II** இற்கு **60** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் **200** சொற்களில் எழுதுக.

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா - இதில்,
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா.

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா

(அ) கவிஞர், தன் மனைவிமீது கொண்ட அன்பு
(ஆ) அவர்மீது மனைவி காட்டும் அக்கறை
(இ) குழந்தைமீது கவிஞர் கொண்ட நேசம்
(ஈ) சம்பவங்களைக் காட்சிப்படுத்துவதில் கவிஞர் காட்டும்திறன்
(உ) இக்கவிதையிலே பயின்றுள்ள அணிகளும் அவற்றிலுள்ள நயங்களும்

(5 × 6 = 30 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. தலைவியின் காதல் உணர்வு,
   (i) "மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத..."
   (ii) "உள்ளம்போய் நாணபோய் உரைபோய் வரிநெடுங்கண்..."
   எனத்தொடங்கும் செய்யுள்களில் வெளிப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

3. பாரதியாரின் **'யேசு கிறிஸ்து'** கவிதையில் இடம்பெறும்,
   (i) யேசுவின் வரலாறும் அது உணர்த்தும் உட்பொருளும்
   (ii) உருவகங்கள்
   ஆகியனவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

4. **'உரிமையும் கடமையும்'** என்ற கட்டுரையில்,
   (i) அன்பு
   (ii) சமத்துவம்
   ஆகியவற்றின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்படும் வகையினை விளக்குக.

(15 புள்ளிகள்)

5. **'தீவு மனிதன்'** சிறுகதையில் கதைசொல்லி,
   (i) தனது 'தீவு'
   (ii) குழந்தைகள்மீது தனக்குள்ள ஈடுபாடு
   ஆகியன பற்றி விவரிக்குமாற்றினைத் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

* * *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
0001183